செய்தி குறிப்பு எண்.53 நாள்.5.6.2008

## டீசல் மீது விற்பனை வரி குறைப்பு.
## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு.

கடந்த ஒரு மாத காலமாகவே ஏடுகளில் தொடர்ந்து செய்தியாக வந்தபடியே, நேற்றையதினம் மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையை தவிர்க்க முடியாத சூழ்நிலையில் உயர்த்தியதோடு, அதற்கான விளக்கத்தை பிரதமர் அவர்கள் நாட்டிற்கு அளித்திருக்கின்றார்கள். அந்த விளக்கத்தில் பெட்ரோலிய பொருட்கள் மீது அதிக அளவில் விற்பனை வரி விதிக்கும் மாநிலங்கள் அந்த வரியைக் குறைத்து சுமையைப் பகிர்ந்து கொள்ள முன் வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2006ஆம் ஆண்டிலேயே, மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திய போது; விற்பனை வரியை 25 சதவீதத்திலிருந்து 23.43 சதவீதமாகக் குறைத்து அறிவித்து, அதனை நடைமுறைப்படுத்திய முதல் மாநில அரசு தமிழக அரசு தான். அதன் பின்னர் மத்திய அரசு டீசல் விலையை ஓரளவு குறைத்த போதும்கூட, தமிழக அரசு குறைத்த விற்பனை வரியை மீண்டும் உயர்த்தாததால் தமிழக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு இன்றளவும் ரூ. 200 கோடி இழப்பு ஏற்பட்டு வருகிறது. இப்போது அவற்றின் விலையை மத்திய அரசு உயர்த்தியிருக்கும்போது விற்பனை வரியைக் குறைத்திடுமாறு தமிழக அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அவர்கள் ஆலோசனை கூறியுள்ளார். அவரது ஆலோசனையை அலட்சியப்படுத்தாமல்; ஏற்கனவே 2006ஆம் ஆண்டு விற்பனை வரியைக் குறைத்தது போலவே இப்போதும் டீசல் மீதான விற்பனை வரியில் 2 சதவீதம் குறைப்பதென தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் ஆண்டுக்கு மேலும் 260 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு இழப்பு ஏற்படும்.

ஆனால் 2004ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர், மூத்த காங்கிரஸ் தலைவர், திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள் 19–11–2004 அன்று அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவை நோக்கி விற்பனை வரியை டீசலுக்குக் குறைக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்த போது, முதல்வராக இருந்த ஜெயலலிதா சொன்ன பதில் வருமாறு :–

"இப்போது எஸ்.ஆர்.பி. மாநில அரசுக்கு அறிவுரை வழங்குகிறார். அதாவது மாநில அரசு தனக்கு வருகின்ற வருவாயை எப்படி இழக்க வேண்டும், இதனால் இந்த மாநிலம் எப்படி பொருளாதாரச் சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டுமென்று அறிவுரை வழங்குகிறார். இந்த யோசனையை எஸ்.ஆர்.பி. அவர்கள் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களுக்கு வழங்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்"

அன்று எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்களுக்கு இவ்வாறு பதில் சொன்ன முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தான் – இப்போது விற்பனை வரியைக் குறைக்க அறிவுரை வழங்கியிருக்கிறார். முடிந்த அளவு நாமும் அதனைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

***

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.